

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | ஏப்ரல் 13, 2017 | புரட்சி 16 | முழக்கம் 13 | விலை: ரூ.3.00


## வழக்கறிஞர் போராட்டத்தில் விடுதலை இராசேந்திரன் பேச்சு

# வஞ்சிக்கப்படும் தமிழக விவசாயிகள்

*புது தில்லியில் சுமார் ஒரு மாத காலமாக போராடும் தமிழக விவசாயிகளுக்கு ஆதரவு தெரிவித்து, சென்னை உயர்நீதிமன்ற முற்போக்கு வழக்கறிஞர்கள் சங்க சார்பில் 6.4.2017 அன்று ஒரு நாள் அடையாள பட்டினிப் போராட்டம், அமைப்பின் தலைவர் வழக்கறிஞர் ரஜினிகாந்த் தலைமையில் உயர்நீதிமன்ற வளாகத்துக்கு வெளியே நடைபெற்றது. பல்வேறு அரசியல் கட்சியின் தலைவர்கள் பங்கேற்றுப் பேசினர். கழக சார்பில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், விவசாயிகளின் கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினார். அவர் உரையில் குறிப்பிட்டதாவது:*

“தமிழக விவசாயத்தையும் விவசாயிகளையும் காங்கிரஸ் ஆட்சியானாலும், பா.ஜ.க. ஆட்சியானாலும் தொடர்ந்து வஞ்சித்து வருகிறது. டெல்லியில் 25 நாள்களாக போராடும் விவசாயிகளை மோடி ஆட்சி திரும்பிப் பார்க்கக் கூட மறுப்பது தமிழர்களுக்கு இழைக்கும் அவமானம். மூன்று முறை மத்திய நிதியமைச்சர் ஜெட்லியை சந்தித்துப் பேசிய பிறகு இறுதி சந்திப்பில் ஓரளவு முன்னேற்றம் இருந்தது என்று போராடும் விவசாயிகள் சங்கத் தலைவர் அய்யாக்கண்ணு தொலைக்காட்சிக்கு பேட்டி அளித்தார். என்ன முன்னேற்றம் என்ற கேள்விக்கு, மூன்றாவது முறையாக அமைச்சர் எங்களை உட்கார வைத்துப் பேசினார் என்று கூறினார். தமிழக விவசாயிகளை உட்கார வைத்துப் பேசுவதற்குக்கூட இவர்கள் தயாராக இல்லை. பிரதமர் மோடி சந்திக்கவே மறுத்து வருகிறார். மோடியின் பா.ஜ.க. பார்வையில் போராடும் விவசாயிகளும் இந்துக்கள் தானே! இந்துக்களின் காவலர் இந்துக்களின் தேசம் என்று மார்தட்டும் ஆட்சி, விவசாயிகளை இப்படி அவமதிக்கலாமா?

இப்போது விவசாயிகள் முன் வைக்கும் கோரிக்கைகள் என்ன?

விவசாயிகளுக்கான பயிர் கடன், மாநில அரசு கூட்டுறவுத்துறை, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமும் வழங்கப்படுகிறது. தனியார் நிதி நிறுவனங்களும் கடன் தருகின்றன. கூட்டுறவுத் துறை வழங்கும் கடன்களை ரத்து செய்யும் அதிகாரம், மாநில அரசிற்கு உண்டு. இப்போது சென்னை உயர்நீதிமன்றமே அதை இரத்து செய்துள்ளது. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் வழங்கப்படும் கடன்களை ரத்து செய்யும் அதிகாரம், மத்திய அரசுக்கே உள்ளது. இதன் படி, பல்வேறு வகையில், தமிழக விவசாயிகள், 86 ஆயிரம் கோடி ரூபாய் கடன் பெற்றுள்ளனர். வறட்சியால் விவசாயிகள் பாதிக்கும் நிலையில், இந்த கடன்களை முற்றிலும் ரத்து செய்ய வேண்டும் என்பது, விவசாயிகளின் கோரிக்கை.

ஆந்திரா, தெலுங்கானா மாநில அரசுகள் வங்கிகளுடன் பேசி, ஆந்திரா, 60 ஆயிரம் கோடி ரூபாய்; தெலுங்கானா, 17 ஆயிரம் கோடி ரூபாய், விவசாய கடன்களை ரத்து செய்துள்ளன. வங்கிகளுக்கு ஐந்து தவணைகளில் பணத்தை திருப்பி செலுத்துவதாக உறுதி அளித்து, இரண்டு தவணைகளையும் செலுத்தி விட்டன.

உத்தர பிரதேச அரசு, விவசாயிகளின், 36 ஆயிரம் கோடி ரூபாய் கடனை தள்ளுபடி செய்துள்ளது. இதன்படி, அம்மாநிலத்தைச் சேர்ந்த, 92.5 சதவீத விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர். தமிழக அரசும் இந்த முயற்சியை மேற்கொள்ளலாம். விவசாயிகள் கடன்களை ரத்து செய்யவும், அதற்கு மத்திய அரசு நிதி உதவி செய்யவும் ஏற்கெனவே உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழக காவிரி பாசனப் பகுதி மாவட்டங்களின் பாசனம் உள்ளிட்ட தேவைகளுக்கு, ஆண்டு தோறும், 193 டி.எம்.சி., காவிரி நீரை, கர்நாடகா வழங்க வேண்டும். ஆனால், நீரை தராமல் கர்நாடக அரசு முரண்டு பிடிப்பதால், டெல்டா மாவட்டங்களில் சாகுபடி கடுமையாக பாதித்து வருகிறது.

ஐந்து ஆண்டுகளாக, ஜூனில் நடக்க வேண்டிய, குறுவை சாகுபடி நடக்கவில்லை. பெருமளவு இழப்பு ஏற்பட்டு, 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் தற்கொலை செய்து இறந்துள்ளனர். காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் காவிரி நீர் முறைப் படுத்தும் குழுக்களை அமைக்காததே, இதற்கு காரணம்.

தமிழகம் – கர்நாடகா இடையே, பல ஆண்டுகளாக நிலவி வரும் பிரச்னைக்கு தீர்வு காண அமைக்கப் பட்ட காவிரி நடுவர் மன்றம், 2007இல் இறுதி தீர்ப்பை வழங்கியது. இந்த தீர்ப்பு, தமிழக அரசின் தொடர் சட்ட போராட்டங்களால், 2013இல் மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டது.

இதன்படி, காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் காவிரி நீர் முறைப்படுத்தும் குழுவை மத்திய அரசு அமைத்திருக்க வேண்டும். உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தும், மத்திய அரசு அமைதி காக்கிறது. முதலில் உச்சநீதிமன்ற தீர்ப்பையேற்று வாரியம் அமைக்க ஒப்புக் கொண்டார்கள். பிறகு முடிவை மாற்றிக் கொண்டு, இதில் தலையிடும் உரிமை உச்சநீதிமன்றத்துக்கு கிடையாது என்று மனுதாக்கல் செய்துவிட்டது மோடி அரசு. மேலும், காவிரி நீர் பிரச்னைகளுக்கு தீர்வு காண, புதிய நதிநீர் தீர்ப்பாயம் அமைக்க முயற்சி நடக்கிறது. இதனால், காவிரி நடுவர்மன்ற இறுதி தீர்ப்பே கேள்விக்குறியாகி உள்ளது.

நெல், கரும்பு, கடுகு, மஞ்சள் உள்ளிட்ட, 40 வகையான வேளாண் உற்பத்தி பொருள்களுக்கு, மத்திய வேளாண் விளை பொருள் நிர்ணய ஆணையம், விலை நிர்ணயம் செய்து வருகிறது. சாகுபடி செலவை மட்டுமே கருத்தில் கொண்டு, இந்த விலை நிர்ணயம் செய்யப்படுவதால், விவசாயிகளுக்கு போதிய விலை கிடைக்கவில்லை. பல பயிர்களுக்கு உற்பத்தியை பொறுத்தே இடைத்தரகர்கள் விலை நிர்ணயம் செய்வதால், விவசாயிகளுக்கு நஷ்டம் தொடர்கிறது. இதுவே, அவர்களின் தற்கொலைக்கு காரணம்.

உற்பத்தி பொருட்களுக்கு மத்திய, மாநில அரசுகளே உரிய விலை நிர்ணயம் செய்தால், பிரச்னை ஓரளவு தீரும். பல மாநிலங்களில், 2004இல் கடும் வறட்சி ஏற்பட்டு, விவசாயிகள் தற்கொலை அதிகரித்தது. இதற்கு தீர்வு காண, வேளாண் ஆராய்ச்சியாளர், எம்.எஸ்.சுவாமிநாதன் தலைமையிலான, ஒன்பது பேர் குழு அமைக்கப்பட்டது.

’விவசாய உற்பத்தி பொருட்களுக்கு, 50 சதவீத கூடுதல் விலையை நிர்ணயிக்க வேண்டும்’ என மத்திய அரசுக்கு, இக்குழு பரிந்துரைத்தது. இந்த அறிக்கையை, நாடாளுமன்றத்தின் இரு அவைகளில் கூட, இன்னும் தாக்கல் செய்யப்படவில்லை.

தமிழகத்தில், இயல்பான ஆண்டு மழையளவு, 91.1 செ.மீ., – மாநிலத்தில், 34 ஆறுகள் உள்ளன. மொத்த நீர்வள ஆதாரம், 885 டி.எம்.சி., இதில், கர்நாடகா, கேரளா, ஆந்திரா மாநிலங்கள் வழங்க வேண்டிய, 264 டி.எம்.சி.,யும் அடக்கம். மாநிலத்திற்கு கிடைக் கும் நிலத்தடி நீர்வள ஆதாரத்தில், 77 சதவீதத்திற்கும் மேல் பயன்படுத்தப்படுகிறது.

தமிழகத்திற்கு நீர்வளம் வடகிழக்கு பருவமழை மூலமே கிடைக்கிறது. உரிய சேமிப்பு கட்டமைப்புகள் இல்லாததால், இந்த நீரின் பெரும்பகுதி வீணடிக்கப்படுகிறது. தமிழகத்தின் நீர் தேவையை பூர்த்தி செய்ய, நதிகள் இணைப்பு திட்டத்தை செயல்படுத்துவது அவசியம். காவிரி – வைகை – குண்டாறு, தாமிர பரணி – கருமேனியாறு – நம்பியாறு, அத்திக் கடவு – அவினாசி, பாலாறு – பெண்ணையாறு இணைப்புத் திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம், பல்வேறு மாவட்டங்களுக்கு போதுமான நீர்வளம் கிடைக்கும்.

இதில் ஒவ்வொரு திட்டத்திற்கும், 5,000 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும். அத்திக்கடவு – அவினாசி திட்டம், தாமிரபரணி – கருமேனியாறு – நம்பியாறு இணைப்பு திட்டங்களுக்கு, சமீபத்திய தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில், குறைந்த அளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் நிலவும் போராட்டங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவே, அடையாளத்துக்காக இதுபோன்ற குறைந்த நிதி ஒதுக்குவது மாநில அரசின் வழக்கமாகியிருக்கிறது. எனவே, மத்திய அரசு மனது வைத்தால் மட்டுமே, தமிழகத்தில் நதிகள் இணைப்பு சாத்தியமாகும் என்ற நிலை!

**கரும்பு நிலுவை பிரச்னை :**

தமிழகத்தில், மூன்று லட்சம் விவசாயிகள், 8.40 ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்து வருகின்றனர். கரும்பு கொள்முதலுக்கு, மத்திய அரசு நிர்ணயிக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலை; மாநில அரசின் பரிந்துரை விலையையும் சேர்த்து, கொள்முதல் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

சந்தையில் சர்க்கரை விலை குறைவால் உற்பத்தி செலவை ஈடுகட்ட முடியவில்லை எனக்கூறி, சர்க்கரை ஆலைகள், 2013 முதல் 2015 வரை, கரும்பு கொள்முதல் விலையை வழங்கவில்லை.

2015க்கு பின், சர்க்கரை விலை உயர்ந்து, இலாபம் கிடைத்தும், இதுவரை, விவசாயிகளுக்கு, 1,600 கோடி ரூபாய் நிலுவையில் வைத்துள்ளன.

இது தொடர்பாக, தனியார் சர்க்கரை ஆலை நிர்வாகங்களை அழைத்து, அரசு தரப்பில் பலமுறை பேச்சு நடத்தியும் பயன் இல்லை. அரசின் உத்தரவுக்கு சர்க்கரை ஆலை நிர்வாகங்கள் கட்டுப்படாமல் இருப்பதற்கு, சட்டத்தில் உள்ள ஓட்டைகளே காரணம். ’கரும்பு கொள்முதல் விலையை நிர்ணயிக்கும் அதிகாரத்தை, சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றி, மாநில அரசு சட்டப்பூர்வமாக்கி கொள்ள வேண்டும்’ என, 2005இல், ஐந்து நீதிபதிகள் கொண்ட உச்ச நீதிமன்ற அமர்வு உத்தரவிட்டது.

12 ஆண்டுகள் ஆகியும், இன்னும் தமிழக அரசு அதற்கான முயற்சி எடுக்கவில்லை. தமிழக அரசு இந்த சட்டத்தை இயற்றுவதே, இந்த சிக்கலுக்கு தீர்வாகும். இதுபோன்ற பிரச்னை களுக்கு, இப்போதாவது மத்திய, மாநில அரசுகள் தீர்வு கண்டால் தான், அவர்களின் வாழ்வாதாரம் மேம்படும்; தொடரும் மரணங்களையும் தடுக்க முடியும்” என்றார் விடுதலை இராசேந்திரன்.

## ஃபாரூக் நினைவேந்தல்: குடும்ப நிதி வழங்கல்



*நாள் : 16.4.2017 ஞாயிறு மாலை 4 மணி*

*இடம் : கோவை அண்ணாமலை அரங்கு (தொடர் வண்டி நிலையம் எதிரில்)*

*உரை : கொளத்தூர் மணி, விடுதலை இராசேந்திரன், கோவை இராமகிருஷ்ணன், இரா. அதியமான், வழக்கறிஞர் ப.பா. மோகன், கேரளயுக்திவாதி (பகுத்தறிவாளர்கள்) தோழர்களும், பல்வேறு இயக்கங்களின் பொறுப்பாளர்களும் பங்கேற்கிறார்கள்.*

*ஏற்பாடு : கோவை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம். அனைவரும் வருக!*

தலையங்கம்

# தருண் விஜய் உண்மை முகம்!

திருக்குறள் பெருமையைப் பேசுகிறார், தருண் விஜய் என்று தமிழ்நாட்டில் அவருக்கு சிவப்புக் கம்பளம் விரித்து பாராட்டு மழைகளை பொழிந்தவர்கள் உண்டு. பா.ஜ.க.வின் முன்னாள் மாநிலங்களவை உறுப்பினரான அவர், அரித்துவாரில் கங்கைக் கரையில் வள்ளுவர் சிலை வைக்கப் போவதாகக் கூறினார். வைதீகப் பார்ப்பனர்கள், திருவள்ளுவர் ‘தீண்டத்தகாதவர்’ என்று கூறி, சிலையை ‘புனித நதி’க் கரையில் நிறுவ எதிர்த்தனர். அதற்குப் பிறகு ‘சங்கராச்சாரி சதுக்கம்’ என்ற இடத்தில் சிலையை நிறுவ முடிவு செய்த போது சொரூபானந்த சரசுவதி எனும் பார்ப்பனர் தலைமையில் பார்ப்பனர்கள் எதிர்த்தனர். இது ஆதிசங்கரர் அறக்கட்டளைக்குரிய இடம். ஆதிசங்கரர் சிலை மட்டுமே இருக்க வேண்டும் என்று கூறி விட்டனர். கடைசியில் பொதுப் பணித்துறை விருந்தினர் வளாகத்தில் சிலை திறப்பு நடந்தது. தருண் விஜய் இப்படியெல்லாம் நடத்திய ‘தமிழ்ப் பற்று’ நாடகம், இப்போது முடிவுக்கு வந்திருக்கிறது.

புதுடில்லி நொய்டா பகுதியில் ஆப்பிரிக்க நாட்டின் மாணவர் தாக்கப்பட்டது குறித்து சர்வதேச தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டி அளித்த தருண் விஜய், “நாங்கள் இனவாதிகள் அல்ல; அப்படி இருந்திருப்போமானால், நாங்கள் எப்படி தென்னிந்தியர்களுடன் சேர்ந்து வாழ்ந்து கொண்டிருப்போம். அவர்களும் கருப்பர்கள்தானே? (If we are racist how is it that **we live with** South Indians for they are ‘black’ too) – என்று கூறியிருக்கிறார். “வடநாட்டுக்காரர் களாகிய நாங்கள் ஆரியர்கள். நாங்கள் தென்னாட்டு திராவிடர்களான கருப்பர்களுடன் சேர்ந்து வாழ சம்மதித்திருக்கிறோமே” என்ற கருத்தை வேறு மொழியில் அவர் பேசியிருக்கிறார்.

திராவிடர்கள் கறுப்பர்கள் என்பதை நாம் சிறுமையாகக் கருதவில்லை. கறுப்பு பெருமைக்குரிய அடையாளம்தான். ஆனால்;, ஆரிய வெள்ளையர்கள் ஏதோ மனமிறங்கி, திராவிட கருப்பர்களோடு சேர்ந்து வாழ முன் வந்திருப்பதுபோல் பேசுவதுதான் பச்சை இனவாதம். இனவாதத்தை மறுப்பதற்கு அவர் எடுத்துக் காட்டிய சான்றே அவரது உள்ளத்தில் ஆழமாகப் புரையோடியிருக்கும் இனவெறியை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துவிட்டது. நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவரும் காங்கிரஸ் உறுப்பினருமான கருநாடகத்தைச் சார்ந்த மல்லிகார் ஜுனா கார்கே அவையில் தருண் விஜய் பேச்சுக்கு கடும் கண்டனம் தெரிவித்திருக் கிறார்.

“தென்னாட்டு மக்களான நாங்கள் இந்த நாட்டின் குடிமக்கள் இல்லை என்கிறீர்களா? ஹிட்லர் பேசிய இனவாதத்தை இங்கே இறக்குமதி செய்கிறார்களா? சங்பரிவார்களின் தத்துவத்தை இந்த ஆட்சி செயல்படுத்துகிறதா?” இத்தகைய இனவாதம் தொடருமேயானால் எதிர்காலத்தில் நாம் சுதந்திரத்தையே இழந்து விடுவோம் என்று அம்பேத்கர் எச்சரித்தார். தருண் விஜய் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உணர்ச்சியோடு பேசியிருக்கிறார் கார்கே. பாராட்ட வேண்டும். ஆனால் தமிழ்நாட்டிலிருந்து சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாய் திறக்காமல் மவுனம் காத்திருப்பது வன்மையான கண்டனத்துக்கு உரியது. கார்கேவுக்கு அடுத்த இருக்கையில் அமர்ந்துள்ள அ.இ.அ.தி.மு.க சசிகலா அணியைச் சார்ந்த தம்பிதுரை – ஏதோ தமக்கு தொடர்பில்லாத பிரச்சினை போல் அமர்ந்திருப்பதை நாடாளுமன்ற காணொளி மூலம் பார்க்க முடிந்தது. கர்நாடக காங்கிரஸ் தலைவருக்கு ஏற்பட்ட உணர்ச்சி, தமிழ்நாட்டு ‘திராவிட’ கட்சி உறுப்பினர்களுக்கு இல்லாமல் போய்விட்டது.

தருண் விஜய் ஆர்.எஸ்.எஸ். ஏடான ‘பஞ்ச ஜம்யா’ ஏட்டில் ஆசிரியராக 22 ஆண்டுகள் பணியாற்றியவர். ஆர்.எஸ்.எஸ். இனவாதத்தில் ஊறிப் போனவர். மதவாதம் பேசும் ‘சங்பரிவார்’ தொடக்கத்தில் முன் வைத்தது ஆரிய இனவாதம் தான். அந்தக் கண்ணோட்டத்தில் இட்லரையும் முசோலினியையும் ஆதரித்த அமைப்பு ஆர்.எஸ்.எஸ். ஆர்.எஸ்.எஸ்.ஸை தோற்றுவித்தவர்களில் ஒருவரான பி.எஸ். மூஞ்சே, 1931இல் இத்தாலியில் பாசிஸ்ட் இனவெறி இயக்கம் நடத்திய முசோலினியை சந்தித்தவர். இந்தியா திரும்பியவுடன் அவரும் ஆர்.எஸ்.எஸ். தலைவர் ஹெட்கேவரும் இணைந்து, ‘பாசிசமும் முசோலினியும்’ என்ற தலைப்பில் மாநாடு நடத்தினார்கள். ஹிட்லர் – யூதர்களை அழிக்கும் இனவெறி நடவடிக்கையை வெளிப்படையாக ஆதரித்து 1939இல் எழுதியவர் மற்றொரு ஆர்.எஸ்.எஸ். தலைவர் கோல்வாக்கர்.

ஆரிய இனவாதம் பேசியவர்கள் அகண்ட இந்து இராஜ்யத்தை முன் வைத்தவர்கள். பிறகு தங்கள் உருவத்தை மறைத்து மதவாதத்துக்குள் பதுங்கினர். இந்தியா இந்துக்களின் தேசம் என்று கூறியதோடு, இந்தியா என்பதே தவறு. ‘பாரதம்’, ‘பாரதியம்’ என்பதே – இந்துக்களுக்கான அடையாளம் என்கின்றார்கள். தருண் விஜய் மதவாதத்துக்குள் பதுங்கி நிற்கும் ஆரிய இனவாத்தைத்தான் இப்போது பேசியிருக்கிறார்.

‘இந்து – இந்துத்துவா’ என்ற ஒற்றை அடையாளத்தை ‘இந்தியா’ முழுதும் திணிக்க முயலும் இவர்கள் வடநாட்டு ‘இந்து’க்களுக்கு தென்னாட்டு ‘இந்துக்கள்’ அடங்கிப் போக வேண்டும் என்று கூற வருகிறார்களா?

‘இந்தியா’ என்பது ஒரே நாடு அல்ல என்ற வரலாற்று உண்மையைக் கூறினால், ‘பிரிவினைவாதி’, ‘தேசத்துரோகி’ என்று கூக்குரலிடும் சங்பரிவார், பா.ஜ.க., பார்ப்பனியம், தருண் விஜய் கூறும்போது அதை ‘தேச பக்தி’ என்று பாராட்டுகிறதா? என்று கேட்க விரும்புகிறோம்.

‘பிறப்பொக்கும் எல்லா உயிருக்கும்’ என்ற வள்ளுவத்தை உயர்த்திப் பிடிப்பதாக தருண் விஜய் ஆடிய நாடகம், தமிழர்களை ஏமாற்றுவதற்குத்தான் என்ற உண்மையை இப்போதாவது தமிழர்கள் புரிந்து கொள்வது நல்லது.

# கழக உறுப்பினர்களிடம் மாதக் கட்டணம்: சென்னை மாவட்டக் கழகம் முடிவு

சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக கலந்துரையாடல் கூட்டம் ஏப்2ஆம் தேதி மாலை 7 மணியளவில் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் எழுச்சியுடன் நடந்தது. மாவட்ட செயலாளர் உமாபதி கலந்துரையாடலை ஒருங்கிணைத் தார். தலைமைக் கழக செயலாளர் தபசி குமரன் உரையைத் தொடர்ந்து கழகத் தோழர்கள் சென்னை மாவட்டக் கழக செயல்பாடுகள் ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வார ஏடு, ‘நிமிர்வோம்’ மாத இதழ்களை பரப்பும் இயக்கம், பரப்புரைக் கூட்டங்கள் குறித்து கருத்துகளைத் தெரிவித்தனர். அம்பேத்கர் பிறந்த நாள் விழாவையொட்டி அம்பேத்கரின் பவுத்த மதமாற்றம் - இந்து மத எதிர்ப்பு - ஜாதி ஒழிப்புக்காக நடத்திய விவாதங்கள் குறித்து வடசென்னையில் கருத்தரங்கம் நடத்த முடிவு செய்யப்பட்டது. கழகத் தோழர்கள் ஒவ்வொரு மாதமும் உறுப்பினர் கட்டணம் வசூலிக்கும் முறையைத் தொடங்குவது என்று முடிவு செய்யப்பட்டது. முடிவெய்திய கழகத் தோழர் ஆட்டோ சரவணன் குடும்பத்துக்கு மாவட்ட கழக சார்பில் ரூ.20,000/- நிதி வழங்கப்பட்டது. 40க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றனர். சென்னை மாவட்ட கழகத் தலைவர் வேழவேந்தன் நன்றி கூறினார்.

## பசு. கவுதமனின் பெரியாரிய தொகுப்புகள் : தஞ்சையில் அறிமுக நிகழ்வு

தஞ்சை பசு.கவுதமன் பெரியாரின் மொழி, கலையும் பண்பாடும், இலக்கியம், தத்துவம், சித்திரபுத்திரன் கட்டுரைகள் என்ற ஐந்து தலைப்புகளில் தொகுத்து, நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் வெளியிட உள்ள 3,750 பக்கங்கள் கொண்ட தொகுப்புகளைக் குறித்த அறிமுகக் கூட்டத்தை அந்நிறுவனமும், தஞ்சை இலக்கிய வட்டமும் இணைந்து 1-4-2017 அன்று மாலை 6.00 மணியளவில், தஞ்சாவூர் பெசன்ட் அரங்கில் நடத்தினர்.

தஞ்சை இலக்கிய வட்ட சண்முக சுந்தரத்தின் தலைமையில் நடைபெற்ற அக் கூட்டத்தில், செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் தலைவரும் மூத்த பொதுவுடமை இயக்கத் தலைவருமான ஆர். நல்லக்கண்ணு, திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, வழக்குரைஞர் இராஜ்குமார் (தி.மு.க), பேராசிரியர் காமராஜ் உள்ளிட்டோர் கலந்துகொண்டு அறிமுக உரையாற்றினர். கூட்டத்தின் இறுதியில் தொகுப்பாசிரியர் பசு கவுதமன், அவருக்கு துணை நின்ற அவரது வாழ்விணையர் அறிவுச்செல்வி ஆகியோர் பாராட்டப்பட்டனர்.

கூட்டத்தில் பெரியாரிய சிந்தனை யாளர்கள் மருதவாணன், குப்பு.வீரமணி, தஞ்சை மாவட்ட கழக அமைப்பாளர் பேராவூரணி திருவேங்கடம், திருவாரூர் மாவட்ட கழக செய்லாளர் காளிதாசு, பொதுவுடைமைக் கட்சிகளின் முன்னணித் தலைவர்கள், கல்வியாளர்கள் உள்பட திரளாக கலந்து கொண்டனர்.

## மேச்சேரியில் கழகப் பொதுக் கூட்டம்




5-4-2017 அன்று மாலை 6-00 மணியளவில், சேலம் மாவட்டம் மேச்சேரி பேருந்து நிலையத்தில் திராவிடர் விடுதலைக் கழகப் பொதுக்கூட்டம் கிளைக்கழக செயலாளர் இளஞ்செழியன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தின் துவக்கத்தில் காவை இளவரசனின் ‘மந்திரமல்ல தந்திரமே’ என்ற செயல்முறை விளக்க நிகழ்வு நடந்தது. அதனை தொடர்ந்து நங்கவள்ளி அன்பு, தலைமைக் கழகப் பேச்சாளர் சாக்கோட்டை இளங்கோவன் ஆகியோர் உரைகளுக்குப் பின்னர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். நங்கவள்ளி கிருட்டிணன் நன்றி கூறலுடன் நிறைவுபெற்றது.

## தற்காப்புக்கலையில் வெற்றிப் பெற்ற மாணவர்க்கு தோழர் கொளத்தூர் மணி பரிசளிப்பு

6-4-2017 சேலம் மாவட்டம் பஞ்சு காளிப்பட்டி, சவுத் இந்தியன் மெட்ரிகுலேசன் பள்ளியில் தற்காப்புக் கலையில் வெற்றி பெற்றோருக்கு பரிசளிப்பு விழா பள்ளி தாளாளர் சவுந்திரராசன் தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாடு கிக் பாக்சிங் கழகப் பொதுச்செயலாளரும் பயிற்றுநருமான சிவபெருமாள் வரவேற்புரையாற்றினார். தந்தை பெரியார் படத்தினைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி திறந்துவைத்து வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி சிறப்புரையாற்றினார். பள்ளியின் தாளாளர் அப் பள்ளியின் விழா அரங்குக்கு தந்தை பெரியார் விழா அரங்கம் எனப் பெயரிடப்படுவதை உற்சாகக் கைதட்டல்களுக்கு இடையே அறிவித்தார். நிகழ்வில் பள்ளியின் முதல்வர் பிருதிவிராசன், புதுவை சிந்தனையாளர் கழகத் தலைவர் தீனா, சிந்தாமணியூர் தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர் தமிழ்ச்செல்வன், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

## பவுத்த நெறிப்படி நீலாவதி–சந்திரமோகன் வாழ்க்கை ஒப்பந்த விழா

கழகத்தின் எல்லா குழந்தைகள் பழகு முகாம்களிலும் கலந்துகொண்டு உளவியல், தன்னம்பிக்கை வகுப்புகளை திறம்பட எடுத்து வருபவரும், நிலக்கோட்டை தொழிற் சங்கத் தலைவர் செல்வராசு மகளுமான நீலாவதி-சந்திர மோகன் ஆகியோரின் வாழ்க்கைதுணையேற்பு விழா பவுத்த நெறிப்படி, 2-4-2017 அன்று காலை 9-00 மணியளவில் சிறப்புற நடந்தேறியது.

வாழ்த்தரங்கம் தமிழ்நாடு இந்திய குடியரசுக் கட்சியின் தலைவர் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் முனைவர் செ.கு.தமிழரசன் தலைமையில் நடந்தது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி வாழ்த்துரை வழங்கினார். தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் ஆசிரியர் சிவகாமி, திருப்பூர் மவட்டக் கழகச் செயலாளர் முகில்ராசு, முனைவர் பள்ளப்பட்டி மணி மாறன், கும்ப கோணம் இணைப்பதிவாளர் தோழர் ரமணிதேவி ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# சுயமரியாதைக்காகப் போராடுகிறோம்

கடந்த காலங்களில் புலால் உண்ணாமைக்கான தொரு இயக்கம் நம்மிடையே இருந்தது. அதன் பிறகு தான் அந்த கருத்தாக்கம் தீண்டப்படும் சாதியினரின் சிந்தனையில் மின்னலைப்போல் உதித்தது. உயிரோடு இருக்கும் எருமையின் பாலை அவர்கள் மட்டுமே குடிக்க வேண்டும்; செத்துப்போன அதே மாட்டின் பிணத்தை நாம் தூக்கிச் சுமக்க வேண்டும். என்ன ஒரு விந்தை இது நாம் அவர்களைக் கேட்க வேண்டும். மரித்துப் போன உங்கள் தாயின் பிணத்தை மட்டும் ஏன் நாங்கள் சுமக்க அனுமதி மறுக்கிறீர்கள் ? செத்த மாட்டை நம்மிடம் தருவதுபோல் அவர்கள் தாயின் பிணத்தையும் நம்மிடம் தானே தரவேண்டும். சிலர் எப்போதோ ‘கேசரி’ இதழில் எழுதியிருந்தார்கள். ‘சில கிராமங்களில் ஒவ்வொரு ஆண்டும் 50 விலங்குகள் வரை செத்துப் போகின்றன. அவற்றின் இறைச்சி தோல், கொம்பு, எலும்பு, கால் பாதம், வால் இவற்றையெல்லாம் விற்பதால் 500 ரூபாய் வரை கிடைக்கும். தின்னக்கூடாது என்று இறைச்சியை ஒதுக்கி விட்டாலும் மற்றவைகளால் கிடைக்கக்கூடிய வருமானம் என்பது அந்த மக்களுக்கு கிடைக்காமலே போய்விடும்’’ என்பதான ஒரு பரப்புரை ‘கேசரி’யின் மூலம் செய்யப்பட்டது. உண்மையைச் சொல்ல வேண்டுமெனில், அப்படிப்பட்ட பரப்புரைகளுக்கெல்லாம் விளக்கம் சொல்லிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமே இல்லை. ஆனாலும் நம்முடைய மக்கள் அவைகளுக்குத் தக்க பதிலடி கொடுக்காமல் நம்முடைய தலைவர் என்னதான் செய்து கொண்டு இருக்கிறார் என்று கேட்கிறார்கள்.

ஒரு முறை நான் சங்கமனேரில் நடந்த கூட்ட மொன்றிக்குச் சென்றிருந்தேன். இரவு உணவின்போது ‘கேசரி’யிலிருந்து வந்திருந்த செய்தியாளர் ஒருவர் துண்டுச் சீட்டு ஒன்றினை அனுப்பிக் கேட்டிருந்தார்: “செத்த மிருகங்களைச் சுமக்கக் கூடாது என்று உங்கள் மக்களுக்கு நீங்கள் அறிவுறுத்துகிறீர்கள். அவர்களுடைய வீட்டுப் பெண்கள் உடுத்திக் கொள்ள சேலை, ரவிக்கை இல்லை, வேளைக்குச் சாப்பிட உணவில்லை. இவ்வாறு அவர்களுடைய நிலை மிகவும் பரிதாபகரமானதாக இருக்கும்போது செத்த விலங்குகளின் தோல், பாதம், இறைச்சி இவற்றின் மூலம் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய 500 ரூபாய் வருமானத்தை விட்டுவிடச் சொல்கிறீர்களே, அது உங்கள் மக்களுக்குப் பெரிய இழப்பில்லையா ?’’

நான் கேட்டேன், “உங்கள் கேள்விக்கான பதிலை எந்த இடத்தில் சொல்லட்டும் ? இங்கே இந்த நடைபாதையிலேயே சொல்லட்டுமா ? அல்லது ஒரு கூட்டத்தில் சொல்லட்டுமா ? மக்கள் கூட்டத்தின் முன்னின்று விடை சொல்வதுதான் சரியாக இருக்கும்.’’ நான் அந்த செய்தியாளரைப் பார்த்து, “இது மட்டும் தானா அல்லது இன்னும் வேறு ஏதாவது கேட்க வேண்டுமா...’’ என்றேன். அவர் சொன்னார், “அவ்வளவுதான், இதற்கு மட்டும் விடை சொன்னால் போதும்.’’ நான் கேட்டேன், “உங்களுக்கு எத்தனை குழந்தைகள் ? உங்கள் வீட்டில் எத்தனை பேர் உள்ளனர் ?’’ அவர், “எனக்கு 5 குழந்தைகள், என்னுடைய சகோதரருக்கு அய்ந்திலிருந்து ஏழு குழந்தைகள் வரை இருக்கிறார்கள்’’ என்றார். நான் சொன்னேன், “அதாவது, உங்கள் குடும்பம் மிகப் பெரியது. பின் ஏன் நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் கிராமத்திலிருக்கும் செத்த விலங்குகளை எல்லாம் சுமந்து அந்த 500 ரூபாயை நீங்களே சம்பாதிக்கக் கூடாது ? இந்த வாய்ப்பை நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தவிர, ஆண்டுக்கு மேலும் 500 ரூபாய் கிடைப்பதற்கானதொரு ஏற்பாட்டை நானே உங்களுக்குச் செய்து தருகிறேன். என் மக்களுக்கு என்ன ஆகும் என்பதையோ, அவர்களுக்கு உணவு, உடை கிடைக்கும் கிடைக்காது என்பதையோ நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் இந்த வாய்ப்பை நழுவ விடாதீர்கள். நீங்கள் ஏன் இதைச் செய்யக் கூடாது ? நாங்கள் செய்தால் அது எங்களுக்கு வருமானம் என்றால் உங்களுக்கும் அது வருமானம்தானே ? பிறகு என்ன தயக்கம், தூக்குங்கள் செத்த விலங்குகளை.’’

நேற்று ஒரு பார்ப்பன சிறுவன் என்னிடம் வந்து கேட்டான், “உங்களுக்குத்தான் சட்டமன்றங்களிலும் நாடாளுமன்றங்களிலும் இடஒதுக்கீடு செய்யப்பட் டிருக்கிறதே, அவற்றை (மதம் மாறி) ஏன் இழக் கிறீர்கள் ?’’ நான் சொன்னேன், “நீயே ஏன் ஒரு மகராக மாறி அந்த இடங்களையெல்லாம் நிரப்பக் கூடாது ? நாட்டில் ஏற்கனவே பல இடங்களில் வேலை காலியாக இல்லை; வேலை கேட்டு பார்ப்பனர்கள் பலரும் மனு செய்து கொண்டிருக்கிறார்கள். பார்ப்பனர்களாகிய நீங்கள் எல்லோரும் ஏன் மகராக மாறி எங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணியிடங்களைப் பெற்றுக் கொள்ளக் கூடாது ?’’

**டாக்டர் அம்பேத்கர்**



எங்களுடைய இழப்புக் காக நீங்கள் ஏன் கண்ணீர் வடிக்கிறீர்கள் ? என்பது தான் நான் அவர்களிடம் கேட்கும் கேள்வி. சுயமரி யாதைதான் மனித இனத் திற்கு நெருக்கமானதே தவிர, பொருளாதாரம் அல்ல. நல்ல நடத்தையும் ஒழுக்கமும் உள்ள பெண்களுக்குத்தான் தெரியும். ஒழுக்கமற்று இருப்பதன் அனுகூலங்கள், ஆதாயங்கள் பற்றி. நம்முடைய பம்பாயில் பாலியல் தொழிலாளர்களுக் கென்று ஓரிடம் இருக்கிறது. அந்தப் பெண்கள் காலை 8 மணிக்கு எழுந்து அருகிலிருக்கும் உணவு விடுதியில் தங்களுக்கு தேவையான உணவைக் கொண்டுவரச் சொல்வார்கள் (டாக்டர் அம்பேத்கர் குரலை மாற்றிப் பேசுகிறார்) “ஓ சுலை மான்... ஒரு தட்டு நிறைய கொத்துக் கறியும் ரொட்டியும் எனக்கு கொண்டு வா...’’ அவற்றோடு டீ, கேக் முதலியவற்றையும் சேர்த்து சுலைமான் கொண்டு வந்து கொடுப்பார். ஆனால், என்னுடைய ஏழை சகோதரி களுக்கோ மிளகாயும் உப்பும் தூவப்பட்ட வெறும் ரொட்டிகூட கிடைப்பதில்லை. ஆனாலும் அவர்கள் ஒழுக்கத்தைவிட்டுக் கொடுக்காமல் மாண்போடும் மரியாதையோடும் வாழ்கிறார்கள். எங்களுடைய போராட்டமும் மாண்புக்காகவும் சுயமரியாதைக் காகவும்தான். இந்த மாந்தரினம் முழுவதையும் ஒரு முழுமையை நோக்கி இட்டுச் செல்லப் போகிறோம். அதற்காக எத்தகைய இழப்பையும் ஏற்கத் தயங்க மாட்டோம். இதோ இங்கே இருக்கிறார்களே செய்தியாளர்கள் (அவர்களைச் சுட்டுகிறார்) அவர்கள் கடந்த 40 ஆண்டுகளாக மீண்டும் மீண்டும் என்னை கோபமூட்டிக் கொண்டே இருக்கிறார்கள். இன்று வரை அவர்கள் என்னை எவ்வளவு அவதூறு செய்திருக் கிறார்கள் ! இப்போதா வது அவர்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும என்று நான் கேட்டுக் கொள்கிறேன். சிறுபிள்ளைத் தனத்தை கைவிட்டு அறிவார்ந்து நடந்து கொள்ளும்படி அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு: ‘கேசரி’ என்பது திலகர் தொடங்கிய இதழ். அம்பேத்கர் - புத்த மார்க்கத்தில் இணைந்த அடுத்த நாள் (15.10.1956) அன்று ஆற்றிய உரை. ‘தலித் முரசு’ வெளியீடான, ‘நான் இந்துவாக சாக மாட்டேன்’ நூலிலிருந்து.

**ஏப்ரல் 14, அம்பேத்கர் பிறந்த நாள்**

# போலி அறிவியலும் மூடநம்பிக்கை விதைகளும்

## முனைவர் சு. சேதுராமன்

சிதம்பரம் நடராஜர் கோவில்தான் பூமியின் மய்யமா? இந்த மாதிரியான கோயில்களை இப்போதைய அறிவியலால் கட்ட முடியுமா? என்று அவ்வப்போது சமூக வலைதளங்களான பேஸ்புக் மற்றும் வாட்ஸ் அப்பில் மத அடிப்படைவாதிகள் எழுதுகிறார்கள். இந்தியாவின் புராதனச் சின்னங்களான கோபுரங்களின் மேல் உள்ள கலசங்கள் மந்திரங்களின் மூலம் ‘மகா சக்தி’ பெற்று சுற்றி உள்ள ஊர்களில் ‘இடி விழாமல்’ தடுக்கும் வல்லமை பெற்ற ஓர் ‘இடிதாங்கி’யாகச் செயல்படும் வல்லமை கொண்டவை என்றும் இந்த ‘அறிவியல் பூர்வமான’ அமைப்பை அந்தக் காலத்திலேயே நம் முன்னோர்கள் கண்டுபிடித்துவிட்டார்கள் என்றும் உங்களிடம் சொல்லி இருக்கக் கூடும். இதேபோலவே செல்பேசி கோபுரங்களில் வரும் கதிர்வீச்சுக் காரணமாகத்தான் ‘சிட்டுக் குருவி’ இனம் அழிந்து போவதாகவும், சிதம்பரம் கோவில் நடராஜரின் கால் உள்ள இடத்தில்தான் பூமியின் காந்தப் புல மய்யம் உள்ளதாகவும், அம்மைநோயின்போது வேப்பிலைகள் கட்டுவது அது ஒரு ‘ஆண்டி-பயாடிக்’ என்ற அறிவியல் உண்மையின் காரணமாகத்தான் என்றும் உங்களிடம் யாரேனும் சொல்லி இருக்கக்கூடும்.

மேற்கண்ட கருத்துகளை நீங்கள் நம்பி இருந்தால் நீங்களும் ‘போலி அறிவியலுக்கு’ப் பலி ஆனவர்தான். ஏனெனில், உண்மையில் கோயில் கலசங்கள் இடி தாங்கிகள் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை.

சிட்டுக் குருவிகள் நகர்ப்புறங்களில் குறைந்து வருவதற்குக் காரணம் அவை கூடு கட்டுவதற்கு இலகுவான இடங்கள், மரங்கள் குறைந்து வருவதுதான். பூமி கோள வடிவிலானது, ஒரு கோளத்தின் காந்த மய்யம் அதன் நடுவில்தான் இருக்க முடியுமே தவிர அதன் வெளிப் பரப்பில் இருக்க முடியாது. வேப்பிலை ‘ஆண்டிபயாடிக்’ என்றும், அதனால்தான் அம்மை நோயின்போது அதனைக் கட்டுவதாகக் கூறி வரும் நண்பர்களுக்கு ‘அம்மை நோய்’ வைரசினால் ஏற்படும் நோய் என்பதும், ‘ஆண்டிபயாடிக்’ என்பது பாக்டீரியாக்களைக் கொல்லும் மருந்து என்பதும் வைரசும் பாக்டீரியாவும் வேறு வேறு என்பதும் தெரியாது.

**போலி அறிவியல் உருவாகக் காரணம் :** நம்பிக்கைக்கும் அறிவியலுக்கும் இடையேயான ‘சண்டை’ பல நூற்றாண்டுகால வரலாறு கொண்டது. கலிலியோ பூமி உருண்டை என்றபோது, மதவாதிகள் அவரைக் ‘குற்றவாளி’ என்றனர். மத நூல்கள் பூமி தட்டை என்று கூறுவதாகவும் கலிலியோ கடவுளுக்கு எதிராகப் பேசுவதாகவும் கூறி அவரைக் கொல்ல முனைந்தனர். டார்வின் உயிரி தோற்றக் கொள்கையை வெளியிட்டபோது, அது கடவுளுக்கு எதிரானது என்றும், கடவுள்தான் அனைத்து உயிரிகளையும் படைத்தார் என்றும் அவரை மதவாதிகள் சாடினர். ‘மரபியலின் தந்தை கிரிகர் மெண்டல்’ செய்த ஆய்வுகள் கடவுளின் படைப்பிற்கு எதிரானது என்று கூறி கிறிஸ்துவப் பாதிரியார்கள் அவரை இருட்டறையில் அடைத்தனர். இந்தியாவை மூடநம்பிக்கைகளின் தலைநகரம் என்றே நாம் கருதலாம். பாரம்பரியம், மரபு, கலாச்சாரம், மத நம்பிக்கைகளின் பெயரில் எதனை வேண்டுமானாலும் மக்களை நம்ப வைக்கலாம்.

மதத்தில் உள்ள கட்டுக் கதைகள் மிகுந்த கற்பனை வளம் கொண்டவை. அதன் கதைகளில் பூமியைக் கடத்திக் கொண்டு போய் பூமியில் உள்ள கடலிலிலேயே மறைத்து வைத்திருப்பார்கள். பகுத்தறிவும் அறிவியலும் வளர ஆரம்பித்த காலங்களில் முதலில் நமது நம்பிக்கைவாதிகள் ‘அறிவியலால்’ தீங்கு ஏற்படும் என்று பிரச்சாரம் செய்தனர். போட்டோ எடுத்தால் ஆயுசு குறையும் என்றார்கள். அண்ணா பல்கலைக்கழகம் பத்து ஆண்டுகளுக்கு முன்பு செல்பேசிகளைத் தடை செய்து வைத்திருந்தது. ஆங்கில மருந்துகள் ‘பக்க விளைவுகள்’ கொண்டவை என்றனர். ஆனால் அறிவியல் வளர வளர அடிப்படைவாதிகளால் அறிவியலை முழுமையாக எதிர்க்க முடியவில்லை. மக்கள் அறிவியலைப் பின்பற்றிச் சிந்திக்கத் தொடங்கினர். இதே நிலை தொடர்ந்தால் மதவாதிகளின் பிழைப்பில் மண் விழுந்துவிடும். என்ன செய்வது என்று சிந்தித்துத் திட்டம் போட்டவர்களின் கண்டுபிடிப்பே போலி அறிவியல் ஆகும். அறிவியலை எதிர்த்த நாட்கள் போய், இப்போது ஒவ்வொரு மதநிறுவனமும் எங்கள் மதம்தான் அறிவியல் பூர்வமானது என்று அடித்துக் கொள்ளும் நிலை வந்து விட்டது.

இந்தப் போலி அறிவியலின் அடிப்படை எளிமையானது. அது வீழ்த்த இயலாத எதிரியை அருகில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான். இதன்படி அறிவியலையும் நம்பிக்கைகளையும், கட்டுக்கதைகளையும், பாரம்பரிய மருத்துவ மூடநம்பிக்கைகளையும் கோர்த்துவிடுவதுதான். இதன்படி மூடநம்பிக்கைகள் அனைத் தும் அறிவியல் பூர்வமானது என்று மக்கள் கருதுவார்கள். ஆர்கானிக் உணவுக் கடைகள் இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு. ஒரு கிலோ வெள்ளரி சாதாரணமாக ரூ.30. ஆனால், ஆர்கானிக் கடைகளில் ரூ.60 முதல் 100 வரை.

இவ்வாறு மதத்தில் உள்ள ஒவ்வொரு மூடநம்பிக்கையின் பின்பும் ஒரு அறிவியல் உள்ளதாக கதை கிளப்பி விடப்படுகின்றது. தாலி கட்டுவது, தீ மிதிப்பது, ஓமம் வளர்ப்பது, கோமியம் குடிப்பது, கோயில் சுற்றுவது போன்ற அனைத்தும் இன்று அறிவியல் பூர்வமானது என்று கதை கட்டப்பட்டு உள்ளது. அந்தக் கதைகள் மேம்போக்கானதும் சக்தி நிலையை உணரும் ஆன்மிக அனுபவம் சார்ந்ததாகவும் இருக்கும்.

இந்தக் கதைகளைக் கட்டுவதற்கென்று ஆன்மிக எழுத்தாளர்கள் பலர் உள்ளனர். இவர்கள் ஆன்மிகத்தை மய்யமாகக் கொண்டு வெளிவரும் பத்திரிகைகளின் மூலம் இதனைச் செய்கின்றனர். ஒவ்வொரு வாரமும் ஒரு புதுக்கதை இருக்கும். எடுத்துக்காட்டாக, அதன் தலைப்புகள் ‘அம்மி மிதிப்பதன் அறிவியல் அடிப்படை’, ‘குளத்தைச் சுற்றினால் சரியாகும் தோல் நோய்’ என்றவாறு இருக்கும்.

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# இளம்பிள்ளையில் கழகப் பொதுக் கூட்டம்





சேலம் மாவட்டம் இளம்பிள்ளை திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் ஏற்பாடு செய்த பெரியாரியல் கொள்கை விளக்கப் பொதுக்கூட்டம் 07.04.2017 வெள்ளிக்கிழமை அன்று இரவு 6-00 மணிக்கு துவங்கியது. கூட்டத்தின் முதல் நிகழ்வாக நிமிர்வு கலைக்குழுவின் பறை ஜாதிக்கான இசை அல்ல பறை தமிழரின் இசை என்ற முழக்கத்தோடு பறை இசை நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சியில் நிமிர்வு கலைக்குழுவினர் பறைக்கேற்றவாறு பரதம் ஆடி பொதுமக்களின் பாராட்டுகளைப் பெற்றனர். தொடர்ந்து நகர தலைவர் சி.தனசேகரன் தலைமையேற்க, முருங்கப்பட்டி ரமேசு வரவேற்புரையாற்ற பொதுக்கூட்டம் தொடங்கியது. நகர செய்தி தொடர்பாளர் சி.மோகன்ராஜ் பெரியார் தொண்டர்கள் மீது மக்கள் கொண்டிருந்த அதிருப்தி குறித்தும் அதை விளக்கியும் உரையாற்ற அவரைத் தொடர்ந்து கழகத் தலைமைக்குழு உறுப்பினர் ஆர்.எஸ். சக்தி பெரியாரியல்வாதிகளுக்கும் மதவாதிகளுக்கும் உள்ள வேறுபாடுகள் குறித்தும் உரையாற்றினார். இவர்களைத் தொடர்ந்து பெரியாரின் கொள்கை விளக்கம் என்ற தலைப்பில் சாக்கோட்டை மு.இளங்கோவன், இம்மக்களின் மீது சுமத்தப்பட்டிருக்கும் இழிவையும், அடிமைத்தனத்தையும் ஒழிக்க தந்தை பெரியார் தன் வாழ்நாளில் எத்தனை எத்தனை போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், பொதுக்கூட்டங்கள், மாநாடுகள் நடத்தினார் என்று விளக்கவுரையாற்றினார். இறுதியாக நகர துணைச்செயலாளர் ரா. தங்கராசு நன்றியுரையாற்றினார்.

## ‘நாசா’வையும் ‘திருமூலரை’யும் துணைக்கு அழைக்கும் வேடிக்கை

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவில் உள்ள நாசாவும், நம்மூர் திருமூலரும்தான் இவர்களால் அதிகமாகப் பாதிக்கப்பட்டவர்கள். எதற்கெடுத்தாலும் நாசாவிலேயே சொல்லிட்டாங்களாம் என்பார்கள். இல்லைன்னா திருமூலர் அப்பவே இதைச் சொல்லி வச்சுட்டுப் போயிட்டாரு என்பார்கள்.

தமிழ் ஆசிரியர்களுக்கே புரியாத ஏதாவது ஒரு செய்யுளை எடுத்துப் போடுவார்கள். அதற்கு இதுதான் அர்த்தம் என்பார்கள். இப்ப அறிவியலில் சொல்றாங்களே, ‘காஸ்மிக் டான்ஸ்’ அதனைக் குறிப்பால் உணர்த்தவே நடராஜர் ‘நடனம்’ ஆடுகின்றார் என்பார்கள். முகநூலில் ஒரு முறை ‘நடராஜர் ஆடுவது டிஸ்கோ டான்சைக் குறிப்பால் உணர்த்துவதாக இருக்கலாம்’ என்று ஒருவரிடம் கேட்டதற்கு, ‘நீ இந்தியாவில் இருக்கத் தகுதி இல்லாதவன் என்றும் தேச பக்தி இல்லாதவன் என்றும்’ ஒருவர் என்னைக் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தைக் கணிப்பதற்கு, சுகமான வாழ்வு வாழ, செல்வவளம் பெற கைரேகை, ஜாதகம், கம்ப்யூட்டர் ஜாதகம், நாடி ஜோதிடம், கிளி ஜோசியம், நியுமராலஜி, நேமாலஜி, மலையாள மாந்த்ரீகம், எந்திரம், வாஸ்து சாஸ்திரம், பரிகார முறைகள், தனலட்சுமி எந்திரம், அனுமன் தாயத்து, பில்லி சூனியம், ஏவல் மற்றும் பல மரபு வழி முறைகள் நம் நாட்டில் இன்றும் பரவலாகப் பின்பற்றப்படுகின்றன.

மேற்கண்ட முறைகளில் ஏதேனும் ஒன்றை வைத்துத் தொழில் செய்து மக்களை ஏமாற்றுபவர்கள் தங்களுக்கென்று ஒரு தொழில் தர்மத்தை வைத்திருக்கின்றனர். அது என்னவெனில், ஒருவர் மற்றவரைக் குறை சொல்லக் கூடாது. காட்டிக் கொடுக்கக் கூடாது என்பதுதான்.

எடுத்தக்காட்டாக ஜாதகம் கணிப்பவர், நியுமராலஜி அல்லது நேமாலஜி தவறான முறை என்று கூறுவதில்லை. கிளி ஜோசியம் பார்ப்பவர் அருகில் கைரேகை பார்ப்பவர் முறை தவறெனக் கூறுவதில்லை.

அதேபோல தங்கள் முறைதான் சரியானது, அறிவியல் பூர்வமானது, மற்ற முறைகள் தவறானவை என்று ஒருவர் மற்றவரை தொலைக்காட்சியில் பேசும் போதோ விவாதங்களின் போதோ காட்டிக் கொடுப்பதில்லை. ஆனால் நாடி ஜோதிடத்திற்கும், கிளி ஜோதிடத்திற்கும் எந்தத் தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை. இதற்குக் காரணம் இவர்கள் அனைவரும் அறிவியலுக்கு, பகுத்தறிவுக்கு எதிரானவர்கள். மூடநம்பிக்கையை வைத்து மக்களை ஏமாற்றுபவர்கள். எனவே இவர்கள் ஒற்றுமையாக இருக்கின்றனர்.

இதே லாஜிக்தான் பல்வேறு மூடநம்பிக்கை முறைகளை வைத்துத் தொழில் செய்பவர்களுக்கும், இந்த முறைகளுக்குள் எந்தத் தொடர்பும் இல்லை. ஒரு நாள் மருந்தில்லா மருத்துவம் என்பார்கள். அடுத்த நாள் எல்லா மருந்துகளும் ஓலைச்சுவடியில் இருக்கிறது என்பார்கள். நமது மரபு வழிதான் தீர்வு என்று ஒரு நாள் சொல்வார்கள். மறுநாள் ‘வெள்ளைக்காரனின்’ மரபான ஹோமியோபதிதான் அனைத்திற்கும் தீர்வு என்பார்கள். திடீரென தொடு சிகிச்சை முறையே உயர்ந்தது என்பார்கள்.

இவர்களின் பிரசங்க உரைகளில் ஒரு நாளும் மற்ற மூடநம்பிக்கை முறைகளைக் குறை சொல்லுவதில்லை, காட்டிக் கொடுப்பதில்லை.

ஆனால், இவர்கள் அனைவரும் அறிவியல் மருத்துவத்தை மட்டும் தவறாமல் குறை சொல்கின்றனர். ஏனெனில், அறிவியலும் மூட நம்பிக்கையும் எதிரெதிரே நிற்கின்றன.

உங்களை நீங்களேதான் காத்துக் கொள்ள வேண்டும். ஒரு வேளை நோய்த் தடுப்பு முறைகளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளாமல், நீங்கள் பாதிக்கப்படும் சூழல் ஏற்படுமாயின் துன்பத்தை அனுபவிக்கப் போவது நீங்கள்தானே தவிர வேறு யாரும் இல்லை என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

இந்தக் கட்டுரையின் நோக்கம் இந்த உலகில் உள்ள அனைத்து போலி அறிவியல் தத்துவங்களையும் உங்களின் கண்முன் நிறுத்துவது அல்ல. மாறாக, போலி அறிவியலின் அடிப்படைகளை ஒவ்வொருவரும் புரிந்து கொண்டு உண்மையான அறிவியல் எது? போலி எது? என்று அடையாளம் காணுவதே ஆகும்.

**நன்றி: ‘விஞ்ஞானச் சிறகு’**

## ஆப்பிரிக்கர்கள் மீதான வெறுப்புக்குக் காரணம் – ஜாதி உணர்வுதான்!

இந்தியாவில் நிறவெறி சில பகுதிகளில், சில இந்தியர்களால் கடைப்பிடிக்கப்படுகிறது. தங்கியிருக்க விசா காலத்தை நீட்டிக்குமாறு கோரும்போதும், வாடகைக்கு வீடு தேடும்போதும், வீதியிலும் பொது இடங்களிலும், எங்களைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும்போது இது வெளிப்படையாகத் தெரிகிறது.

ஆப்பிரிக்கர்களைப் பார்த்தால் ஏற்படுகிற வெறுப்புணர்வுக்குக் காரணம், ஏற்கெனவே இந்தியாவில் இருக்கும் சாதி உணர்வுகள்தான். பட்டியல் இனத்தவரைத் தீண்டத்தகாதோராக காலங்காலமாகக் கடைப்பிடித்துவரும் அதே அணுகுமுறையைத்தான், கருப்பாக இருக்கும் ஆப்பிரிக்கர்களுக்கு எதிராகவும் கடைப்பிடிக் கின்றனர். சாதியம் என்பது மிகப் பலரைத் தாழ்த்தியும், ஒரு சிலரை உயர்த்தியும் நடத்துவது. எளியவர்களைத் தங்களுடன் சேர்த்துக் கொள்ளாமல் விலக்கி வைப்பது. பொது இடங்களில் இந்தியச் சிறுவர்களும் புகைபிடிக்கின்றனர்; நாங்களும் அப்படிப் புகைத்தால், அது கஞ்சா அல்லது மரிஜுவானா தான் என்று முடிவுகட்டுகின்றனர் ஒலியை அதிகப்படுத்திப் பாட்டு கேட்டால் காவல்துறையிடம் புகார் செய்கின்றனர், அல்லது வீடு புகுந்து அடிக்கின்றனர். அதே அவர்கள் வீட்டுப் பிள்ளைகள் செய்யும்போது கேட்டு ரசிக்கின்றனர்.

நாங்கள் மிகவும் பின்தங்கிய கண்டத்திலிருந்து வந்திருக்கிறோம் என்று நினைக்கின்றனர்.. அது உண்மையல்ல. மனித வளக் குறியீட்டெண்ணில் இந்தியாவைவிடச் சிறந்து விளங்கும் ஆப்பிரிக்க நாடுகளும் இருக்கின்றன. ஆப்பிரிக்க நாடுகளிலும் இந்தியாவைவிட வலுவான ஜனநாயகம் நிலவுகிறது. ஆப்பிரிக்கக் கண்டத்துக்கும் பிற கண்டங் களுக்கும் கொத்தடிமைகளாக இந்தியர்கள் சென்ற வரலாறும் இருக்கிறது. உண்மைகள் இப்படியிருக்க, நிறவெறியுடன் எங்களை மட்டமாக நடத்துவது ஏன் ? இந்தியர்களைக் கொத்தடிமைகளாக அழைத்துச் சென்றதைப் போல, ஆப்பிரிக்கர்களை முழு அடிமை களாகப் பிற கண்டங்களுக்கு அழைத்துச் சென்றனர். நம் இரு கண்டமுமே இப்படி மற்றவர் களால் சுரண்டப்பட்டிருக்கும் பொதுவான நிலையில், ஆப்பிரிக்கர்களைத் தாழ்ந்தவர் களாக இந்தியர்கள் ஏன் கருத வேண்டும் ?

**இந்திய – ஆப்பிரிக்க மாணவர்கள் சங்கத் தலைவர் சாமுவேல் ஜாக் எழுதிய கட்டுரையிலிருந்து**


## வெளி வந்துவிட்டது! ‘நிமிர்வோம்’ ஏப்ரல் இதழ்

- ‘திராவிட’ எதிர்ப்பாளர்களுக்கு சில கேள்விகள்.
- இஸ்லாம் குறித்து பெரியார் பார்வை – ஒரு விரிவான தொகுப்பு
- நீட் தேர்வும் – சமூக அநீதியும்
- புத்த தம்மம் x வர்ணதர்மம் – அம்பேத்கர்
- துருக்கியில் கெமால் செய்த புரட்சி
- சீரடி சாய்பாபா யார் ? – பரபரப்பான பின்னணித் தகவல்கள்
- பசுவதைத் தடையின் அரசியல் – ஒரு வரலாற்றுப் பார்வை
- மதங்கள் தேவையில்லை – இன்குலாப் கவிதை




மற்றும் பெரியார் சிந்தனைகளுடன்... தனி இதழ் விலை : ரூ.20

தொடர்புக்கு : நிர்வாகி, ‘நிமர்வோம்’ மாத இதழ், 95, டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், சென்னை – 600 004.
தொலைபேசி எண் : 044 24980745 / 7299230363
www.dvkperiyar.com / nimirvomdvk@gmail.com


Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 13th April 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN